தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள்.12.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1748/B/2025**

திரு. G. சரவணன் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
தஞ்சாவூர் (ம) கும்பகோணம்-612001. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (02.06.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி.எஸ்.மகாலெட்சுமி, தலைமை நீதித்துறை நடுவர், தஞ்சாவூர் (இ) கும்பகோணம் அவர்களின் பிரதிநிதியாக திரு.T.கலைச்செல்வன், சிரஸ்தார், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தஞ்சாவூர் (இ) கும்பகோணம் அவர்கள் (12.06.2026) இன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜரானார்.

2. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரரினுடைய விலாசத்தில் வீடு, வாசல், குடியிருப்பு ஏதும் இல்லை என்ற விவரத்தை இளநிலை கட்டளை நிறைவேற்றுனர் (Junior Bailiff) அவர்கள் சமர்ப்பித்ததாகவும், ஆனால் அதே நேரத்தில் நீதிமன்றம் மூலமாக அனுப்பப்பட்ட பதிவுத் தபாலைப் பெற்றுக்கொண்டு ஒப்புதல் அட்டை பெறப்பட்டதாகவும் சமர்ப்பித்தார். ஏற்கனவே இந்த மனுதாரர் ஆணையத்திற்கு 02.06.2026, 06.06.2026, 08.06.2026 தேதியிட்ட கடிதத்தில் பொது அதிகார அமைப்பிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதமானது, தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, பிரிவு 6(2)-க்கு எதிரானதாகும் என்றும், தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கான தகவல்களை அளிப்பது குறித்து பொது அதிகார அமைப்பால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எதுவும், இச்சட்டத்தின் விதிகளில் உள்ளவாறே இருக்க வேண்டும். மாறாக, பொது அதிகார அமைப்பில் பின்பற்றப்படும் அலுவலக நடைமுறை விதிகளை பின்பற்றுதல் கூடாது என பல்வேறு வழக்குகளில் மாண்பமை மத்திய, மாநில தகவல் ஆணையங்கள் ஏற்கனவே ஆணைகள் பிறப்பித்துள்ளன என்றும், இத்துடன், பொது அதிகார அமைப்பு மனுதாரரை ஏவுரைக்கும் அமைப்பாக (Public authority cannot merely be directing agency to the petitioner) இருக்க முடியாது என மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையம் பல்வேறு வழக்குகளில்

குறிப்பிட்டுள்ளது என்றும், எனவே, மேற்காணும் காரணங்களுக்காக பொது அதிகார அமைப்பில் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளிப்பதற்கான அவசியம் ஏற்படவில்லை என்றும், ஆகவே, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் கடந்த 15.10.2024 நாளிட்ட எனது விண்ணப்பத்தில் கேட்டுள்ள தகவல்களை எனக்கு அளிப்பதற்கும், இந்நேர்வில், எனக்கு ஏற்பட்டுள்ள நீண்ட கால விரயங்கள், பொருளாதார இழப்புக்கள் மற்றும் மன உளைச்சல் ஆகியனவற்றுக்காக சட்டப்பிரிவு 19(8)(b)-இன்கீழ் தகுதியான இழப்பீட்டு தொகையினை எனக்கு அளிப்பதற்கும், பொது அதிகார அமைப்பிற்கு (தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம், கும்பகோணம்) உத்திரவிடுமாறு மாநில தகவல் ஆணையரைக் கேட்டுக்கொண்டு கடிதம் எழுதியுள்ளார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

> தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி மனுதாரர் தாக்கல் செய்த மனுவிற்கு உரிய தகவல்களைப் பெற்றுத்தரவேண்டிய கடமை ஆணையருக்கும், ஆணையத்திற்கும் உண்டு. ஏற்கனவே 16.04.2026 அன்று மனுதாரரை நேரடியாக விசாரணை செய்து, ஆஜராகிய மனுதாரருக்கு உதவும் வகையில், அழிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வகையில் நீதிமன்றத்திற்கு பணிக்கப்பட்டது. ஆனால் மனுதாரர் நீதிமன்றத்திற்கு சரியான முறையில் ஒத்துழைப்பு வழங்கவில்லையென்று மனுதாரரின் கடிதத்தின் வாயிலாக தெரிய வருகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கம் தகவல் பெற்றுத் தருவதே தவிர, பொது தகவல் அலுவலரால் தகவல்களை அளிப்பதற்கு காலதாமதமானால் இழப்பீடு வழங்குவதற்கு சட்டத்தில் வழிவகை இருந்தாலும், அழிக்கப்பட்ட விவரத்தினை சேகரித்து வழங்குவதற்காக ஒரு வாய்ப்பாக மனுதாரருக்கு வழங்கப்பட்டது. நேரில் சென்று விளக்கம் அளிக்குமாறு மனுதாரருக்கு ஆணையம் உத்தரவிட்டும், அந்த உத்தரவினை மதிக்காமல் நீதிமன்றம் 2 முறை நேரடியாக ஆஜராக (Bailiff) மூலமாக அறிவிப்பு வழங்குவதற்கு பணித்தும், நீதிமன்றத்திலிருந்து பதிவுத் தபால் அனுப்பியும், மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டு ஒத்துழைக்க மறுத்தார் என்று மேற்கூறிய கடிதங்கள் வாயிலாக இந்த ஆணையத்தால் அறிய முடிகிறது. **ஆகையால் மனுதாரருக்கு தேவைப்படும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்திற்கு நேரடியாகச் சென்று விசாரணையில் பங்கெடுத்து தேவையான விவரங்களை குறிப்பிட்டுக்கோரிப் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இதுபோன்ற கடிதங்களை ஆணையத்திற்கு சமர்ப்பித்தாலோ, நீதிமன்ற அழைப்பினை மறுத்தாலோ இந்த மனுவின் மீதான நடவடிக்கை கைவிடப்படலாம் என்று இந்த ஆணையம் மனுதாரருக்கு அறிவுறுத்தி, இந்த மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகின்றது.**

ஒம்/-(ரா. பிரியகுமார்)
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1748/B/2025</u>**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
   தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
   தஞ்சாவூர் (ம) கும்பகோணம்-612001.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. G. சரவணன்,
   எண்.2-248/2, கோவிந்தராஜாகோவில் தெரு,
   பசுபதிகோவில் அஞ்சல்,
   தஞ்சாவூர்-614206.
   செல்.9444876386.

Copy to: File. GP PC
120626

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005